R4780

# INTERESTING QUESTIONS
# ஆவலைத் தூண்டும் கேள்விகள்

**கேள்வி :** கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனத்தின் விசேஷமாக அதன் பின்பகுதியை தயவு செய்து விளக்கவும்: “எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே.” (1 தீமோத்தேயு 2:6)

**பதில் :** நமது கர்த்தர் தம்மையே எல்லாருக்குமான மீட்கும் பொருளாக, சரிசமமான விலைக்கிரயத்தைக் கொடுத்தார். இந்த விலைக்கிரயம் ஏற்ற சமயத்தில் பிரயோகிக்கப்படும். சபையானது பாவத்திலிருந்து திரும்பி, கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடப்பதினிமித்தமாக, தற்காலத்தில் அதற்கு இந்த விலைக்கிரயம் சாட்டப்படுதலின் மூலம் உபயோகிக்கப்படுகிறது. அடுத்து இதன் உபயோகம், சாட்டுதல் மூலமாக அல்ல, உலகத்திற்கு உண்மையாகவே கொடுத்தல் மூலமாக ஆகும். மத்தியஸ்த ஆளுகையின் ஆயிர வருட யுகத்தில் அவர்களது அபூரணத்திலிருந்து அவர்களை வெளியேற்றி, ஆதாம் விழுந்துபோவதற்கு முன் தேவனோடு ஐக்கியமாயிருந்த நிலைமைக்கு கொண்டு வரப்படுவார்கள்.

“மனுஷனாகிய கிறிஸ்து இயேசு” என்ற சொற்றொடர் மனுஷனாக அந்த குறிப்பிட்ட நிலைமையில் தம்மை ஒப்புக் கொடுத்ததை குறிக்கிறது என்று நாம் கூறலாம். கல்வாரியில் தம்மை ஒப்புக் கொடுத்ததின் மூலம் நிறைவேற்றி முடித்த அபிஷேகம் பண்ணப்பட்ட மனுஷனாகிய அவரே, “தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராக” தேவனுக்கும் உலக மனுக்குலத்திற்கும் மத்தியஸ்தராக இருக்கிறார். தெய்வீக திட்டத்திற்கு இசைவாக, இந்த யுகத்தில், அவர் மனுக்குலத்தை உயர்த்தும் வேலைக்கு முன்னர், பிதாவானவர் நியமித்திருக்கிற வேறொரு வேலையை அவர் செய்து கொண்டிருக்கிறார். அதாவது “இரட்சிப்பின் அதிபதியாக” யாருக்கு வைக்கப்பட்டிக்கிறாரோ, அந்த சகோதரர்களை தெரிந்தெடுக்கும் வேலையை செய்து கொண்டிருக்கிறார். இவர்கள் மேசியா தலையாக இருக்கக்கூடிய அவரது சரீர அங்கங்களாக எண்ணப்படுகிறார்கள். அவர்கள் “அவருடைய சரீரமாகிய சபை” என்று அழைக்கப்படுகிறார்கள்.

ஆகையால் மனிதனாகிய கிறிஸ்து இயேசு உலகத்தின் இரட்சகர். இடைப்பட்ட காலத்தில், மேலே குறிப்பிட்டபடி, உலகத்திற்கு தமது பலியின் புண்ணியத்தை பிரயோகிக்கும் முன்பு, கேட்கிறவர்களுக்கும் காது உள்ளவர்களுக்கும் அவருக்கு உடன்சுதந்தராக இருக்கப்போகிற சிலருக்கும் சாட்சி கொடுக்கப்படுகிறது. இவர்கள் ஆயிர வருட அரசாட்சியில் தேவனுக்கும் மனிதருக்கும் இடையே தீர்க்கதரிசியாக, ஆசாரியராக, மத்தியஸ்தராக, ராஜாவாக, அவருடன் இணைந்திருப்பார்கள்.

**கேள்வி :** ஆதாம் பாவம் செய்த பிறகு யூதர்களோடு தேவன் செய்த நியாயப்பிரமாண உடன்படிக்கையைப் போல பிரமாணத்தை நிறைவேற்ற ஜீவனை அளிக்கும் ஒரு உடன்படிக்கையை ஆதாமோடு தேவன் பண்ணியிருக்கக்கூடாதா?

**பதில் :** ஆதாம் முழுமையான சோதனையை பெற்ற பிறகு, அவர் அந்த சோதனையில் தோற்ற பிறகு, அவர் மரண தண்டனை கொடுக்கப்பட்ட பிறகு, அவர் கிட்டத்தட்ட விழுந்து போன நிலைக்கு சென்ற பிறகு, இன்னொரு ஏற்பாட்டை தேவன் ஏற்படுத்துவது அவரது ராஜ்யத்தை சிறுமைப்படுத்துவதாக இருக்கும். இது தெய்வீக ஒழுங்குகளுக்கு இசைவாகவும் சரியானதாகவும் இருக்காது என்று நாங்கள் நினைக்கிறோம். இன்னொரு சோதனையை பரிந்துரைப்பது தெய்வீக ஒழுங்குகளுக்கு பொருத்தமற்றதாக இருக்கும். முன்னரே செய்யப்பட்ட மீறுதலுக்கு முதலாவது மீட்கும் பொருள் கொடுக்கப்பட வேண்டும். ஆதாமுக்கும், அபூரணத்தில் பிறந்து, விரும்பியோ, தெரிந்தோ, அறிவுடனோ தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யாத அவரது பிள்ளைகளுக்கும் மிகவும் வித்தியாசத்தை நாம் காண்கிறோம். அவர்களால் தெய்வீக பிரமாணத்தை கைக்கொள்ள முடியுமா அல்லது முடியாதா என்பதைக் காண்பதற்கான ஒரு சந்தர்ப்பம் அவர்களுக்கு கொடுக்கப்படவே இல்லை.

தேவன் இஸ்ரயேலருக்கு நிழலான பரிசுத்தம், நிழலான நீதிப்படுத்துதல் முதலான சூழ்நிலைகளை பொதுவான போதனைகளை கொடுப்பதற்காக கொடுத்தார். சகல மனுக்குலத்திற்கும் தெய்வீக கிருபைக்கும் நித்திய ஜீவனுக்கும் திரும்பி வரக்கூடிய சந்தர்ப்பத்தை கொடுத்து, அவர்களுக்கு கொடுக்கப்போகிற மகா ஆசீர்வாதங்களையும் முன்னறிவித்தார்.